இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 12.10.2026

# வெற்றியின் தோல்வியும் தோல்வியின் வெற்றியும்

**கே**ரியரின் உச்சத்தில் இருந்தவரை தரைக்கு இறங்கி வந்து தாராபுரத்தில் முருங்கைக்காய் பறிக்க வைத்தது தி.மு.க.வின் வெற்றிதானே?

கேரியரின் உச்சத்தில் இருந்தவரை ரோட்டில் இறங்க வைத்து தெருவோரக் கடையில் டீ குடிப்பது மாதிரி நடிக்க வைத்ததும் தி.மு.க.வின் வெற்றிதானே?

கேரியரின் உச்சத்தில் இருந்தவரை சகதியில் இறங்கி டிராக்டர் ஓட்டுவது போல நடிக்க வைத்ததும் தி.மு.க.வின் வெற்றிதானே?

ஒரே ஒரு தொகுதிக்குக்குள் அரைமணி நேரம் வந்து - மூன்றே மூன்று நிமிடம் கத்தி விட்டு ஓடியவரை நான்கு நாட்கள் அலையாக அலைய வைத்ததும் தி.மு.க.வின் வெற்றிதானே?

ஐந்து நிமிடம் பேசினாலே தி.மு.க.வை கொத்து புரோட்டா போட்டு விடுவார் என்று சொல்லப்பட்டவரை ஆள் இல்லாத கிராமங்களுக்குள்ளும் அலைய விட்டதும் தி.மு.க.வின் வெற்றிதானே?

**ஐம்பதாயிரம் வித்தியாசம் வரும் என்று சொன்னார்கள் சில அமைச்சர்கள். 'இல்லை, ஒரு லட்சம் தாண்டி விடும்' என்றார்கள் சில அமைச்சர்கள். இவர்களது ஆசையை நிராசை ஆக்கியது தி.மு.க.வின் வெற்றிதானே? தாராபுரத்தில் 9 ஆயிரமும், மதுராந்தகத்தில் 19 ஆயிரமும்தான் த.வெ.க. கூடுதல். தாராபுரத்தில் வெற்றி பெறுவோமா என்று கடைசி வரைக்கும் விஜய்யை பதற்றத்தில் வைத்திருந்ததும் தி.மு.க.வின் வெற்றிதானே?**

'No officials movements - Halt at Residence' என்று அறிவித்துவிட்டு வீட்டுக்குள் முதலமைச்சரை பதுங்க வைத்ததும் தி.மு.க.வின் வெற்றிதானே?

**'தி.மு.க. அவ்வளவுதான். இத்தோடு முடிந்து விட்டது' என்று கனைத்தார்களே பல மந்திரிகள். மதுராந்தகத்தில் போட்டியிட்ட பரந்தாமன் வாங்கிய வாக்குகள் 54,008. தாராபுரத்தில் போட்டியிட்ட சுகன்யா வாங்கிய வாக்குகள் 57, 370. என்றால் இதுவல்லவா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் வெற்றி?**

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சட்டமன்றத்தில் என்ன சொன்னார்? 'தி.மு.க. வாங்கி இருக்கும் வாக்குகளில் 15 விழுக்காடு அவர்களது கூட்டணிக் கட்சிகளின் வாக்குகள் தான். அவர்கள் மட்டும் இல்லை என்றால் தி.மு.க. எந்தத் தொகுதியிலும் டெபாசிட் வாங்கி இருக்காது' என்று கனைத்தார். என்ன நடந்திருக்கிறது மதுராந்தகத்திலும் தாராபுரத்திலும்? காங்கிரஸ் இல்லாமல், இந்தியக் கம்யூனிஸ்ட் இல்லாமல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இல்லாமல், விடுதலைச் சிறுத்தைகள் இல்லாமல், இந்திய யூனியன் முஸ்லீம்லீக் இல்லாமல், ம.தி.மு.க. இல்லாமல் - தி.மு.க. 30 விழுக்காட்டுக்கு மேல் வாங்கி இருப்பதுதானே தி.மு.க.வின் மாபெரும் வெற்றி?

'தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு இவ்வளவு வாக்குகளை எப்படி வாங்கியது?' என்று கோட்டையில் ஆலோசனை நடந்ததாமே? இதுதானே தி.மு.க.வின் வெற்றி?

'தி.மு.க. டெபாசிட் வாங்காது' என்று முதலமைச்சரை சிலர் நம்ப வைத்துள்ளார்கள். அதில் மண்ணைப் போட்டது தி.மு.க.வெற்றிதானே?

விஜய் விட்ட அறிக்கையில் மகிழ்ச்சியே இல்லையே, ஏன்? இதுதானே தி.மு.க.வின் வெற்றி?

**'வாக்குக்குக் காசு கொடுக்காமல் ' என்பதை திரும்பத் திரும்பச் சொல்கிறார் விஜய். இரண்டு தொகுதியிலும் எவ்வளவு காசை த.வெ.க. இழந்துள்ளது என்பது விஜய்க்கும் அவரது அமைச்சர்களுக்கும் தெரியும். 'அதிகமாக பணம் கொடுக்கிறது த.வெ.க.' என்று சொன்னது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. 'ஜிபே மூலம் பணம் கொடுக்கிறது த.வெ.க.' என்று சொன்னது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி. 'ரூ.5 ஆயிரம் விஜய் கட்சியில் இருந்து எனக்கு கொடுத்துள்ளார்கள். ' என்று புக்கத்துறை என்ற ஊரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி ஒருவரிடம் வாக்காளர் ஒருவர் சொல்லி இருக்கிறார். 'வீட்டுக்கா? ஒரு ஆளுக்கா?' என்று அந்த நிர்வாகி கேட்கிறார். 'ஒரு ஆளுக்கு ரூ.5 ஆயிரம் கொடுத்துள்ளார்கள்' என்று அந்த வாக்காளர் சொல்லி இருக்கிறார். இதை நான் நிரூபிப்பேன் என்கிறார் மார்க்சிஸ்ட் நிர்வாகி. விஜய்க்கு இது கேவலம் இல்லையா? இதுதான் விஜய்யின் தோல்வி!**

'ஐந்து மாத காலம் நான் நல்லாட்சி கொடுத்துள்ளேன், அதனால் எனக்கு மக்கள் வாக்களித்தார்கள்' என்று விஜய் சொல்ல முடியாததுதான் அவரது தோல்வி!

விஜய் தன்னை நம்பவில்லை. தாராபுரம் சத்தியபாமாவின் கண்ணீரைத்தான் நம்பினார். அழவைத்து ரீல்ஸ் எடுத்தார். இதுவே அவருக்கு பெரிய தோல்விதானே?

**விஜய் கட்சி தாராபுரத்தில் அதிக வாக்குகள் வாங்கி வெற்றி பெற்றதற்கு என்ன காரணம் என்பதை நாளிதழ்கள் எழுதி இருக்கின்றன. விஜய் நல்லாட்சி கொடுத்துவிட்டார், அவரது ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் வந்துவிட்டன, அவர் மீது மக்கள் பெரிய நம்பிக்கை வைத்துள்ளனர் என்று எந்தப் பத்திரிக்கையும் எழுதவில்லை. இதுவே அவரது தோல்வி தானே?**

கேவலமான தந்திரத்தை விஜய் செய்தார். 'எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை' என்று சொன்ன பா.ம.க. ஆதரவு தங்களுக்கு இருப்பதாக படம் காட்டினார்கள். பா.ம.க. கொடி விஜய் நகர்வலத்தில் காட்டப்பட்டது. 'சௌமியா அன்புமணி அமைச்சராகப் போகிறார்' என்று பொய்ச்செய்தி பரப்பினார்கள். அதாவது விஜய் தன்னை நம்பவில்லை. 'மற்றும் பலரைத் தான் நம்பினார்'. இது அவரது தோல்விதானே?

'த.வெ.க. - பா.ம.க. கூட்டணி உருவாகி சௌமியா அன்புமணிக்கு அமைச்சர் பதவி கிடைக்கக் கூடும் என்ற தகவல் வலுத்ததாலும் வன்னியர் வாக்கு அப்படியே த.வெ.க.வுக்கு மடைமாற்றமாகி உள்ளது' என்று 'தினமணி' (10.10.2026) எழுதி இருக்கிறது. விஜய் தன்னை நம்பவில்லை. பா.ம.க.வைத் தான் நம்பி இருக்கிறார் என்பது தோல்விதானே?

'சௌமியா அன்புமணி அமைச்சராகும் தகவலால் த.வெ.க.வுக்குச் சென்ற வாக்குகள்' என்று 'இந்து தமிழ் திசை' (10.10.2026) நாளேடு எழுதி இருக்கிறது. 'மதுராந்தகம், தாராபுரத்தில் பா.ம.க.வின் வாக்குகள் த.வெ.க. வேட்பாளருக்கு சென்றுள்ளது' என்று பா.ம.க. நிர்வாகி ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும் அந்த நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது விஜய்யின் தோல்விதானே?

பொதுத்தேர்தலிலும் பெரும்பான்மை பெற முடியவில்லை விஜய்யால். தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர் பதவிகள் கொடுத்து இரவல் முதலமைச்சர் நாற்காலியைப் பெற்று உட்கார்ந்து இருக்கிறார். இப்போதும் பா.ம.க.வுக்கு அமைச்சர் பதவி தரப்போவதாகச் சொல்லி ஏமாற்றி வாக்குத் திருட்டு செய்துள்ளார். இதுவும் விஜய்யின் தோல்வி தானே?

**இவை அனைத்தையும் மொத்தமாகச் சேர்த்து திராவிட நாயகன் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'தி.மு.க.வைப் பொறுத்தவரையில் தோல்வியில் வெற்றி அடைந்துள்ளது. த.வெ.க. வெற்றியில் தோல்வி அடைந்துள்ளது' என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார். இதற்குள் அனைத்தும் அடங்கி இருக்கிறது.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக மூத்த முன்னோடியும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சித் தலைவரும், அண்ணாநகர் தெற்கு பகுதிச் செயலாளருமான நா.இராமலிங்கம் அவர்கள் தனது 80 வது பிறந்தநாளை முன்னிட்டு குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன்,105 (அ) வட்டக் கழகச் செயலாளர் இரா.பொன்னுரங்கம் ஆகியோர் உள்ளனர்.

## த.வெ.க.வின் நீலச் சாயம் வெளுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை!

# இந்த இடைத்தேர்தலில் த.வெ.க.விற்கு தி.மு.க. தண்ணி காட்டி உள்ளது!

## நன்றி தெரிவிப்பில் இ.பரந்தாமன் பேச்சு!

மதுராந்தகம், அக். 12- செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் பரந்தாமன் போட்டியிட்டார்.

தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க நேற்று மதுராந்தகம் பஜார் வீதியில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர், நகரச் செயலாளர் குமார் கூட்டணிக் கட்சி பொறுப்பாளர்கள் ஆகியோருடன் நடந்தே சென்று வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்காத மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்

அப்பொழுது அவர் கூறுகையில்,

எனக்கு இந்த தொகுதியில் வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்காத மக்களுக்கும் வாக்காளர்களுக்கும் தி.மு.க. வேட்பாளர் என்ற முறையில் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தி.மு.க. பல வெற்றி தோல்விகளை கண்டு எப் பொழுதும் மக்களுக்காக களப்பணி ஆற்றி வருகிறது. மக்கள் பணியில் இன்றும் என்றும் தி.மு.க. வழுவாது.

தி.மு.க. எத்தனையோ சூறாவளியை பார்த்த இயக்கமாகும்.

பொதுத் தேர்தல் என்றாலும் இடைத்தேர்தல் என்றாலும் எந்த தேர்தலாக இருந்தாலும் தி.மு.க. முடங்காது.

தமிழக வெற்றி கழகம் என்பது அஸ்திவாரம் இல்லாத கட்சி இயக்கம் என்பது கூட சொல்லுகின்ற அளவிற்கு இது தரம்



உயர்ந்து உள்ளதா என தெரியவில்லை.

பொதுத் தேர்தல் சரிவை கண்டு ஓடி விடமாட்டோம். இதற்கு அடிப்படை காரணம் மக்கள் பணி தான் எந்த மக்கள் பணியும் செய்யாமல் மக்கள் பணி என்ன வென்று தெரியாமல் பொது சேவை என்றால் என்ன வென்று தெரியாமல் அதிர்ஷ்டத்தின் காரணமாக விபத்தின் காரணமாக நூறு இடங்களை பெற்று விட்டது அதனுடைய நீல சாயம் வெளுக்கின்ற காலம் வெகு தொலைவில் இல்லை.

மக்களிடமிருந்து தி.மு.க.வை என்றும் பிரிக்க முடியாது. நடந்து முடிந்த தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சவால் விட்டுச் சென்றார்.

ஆளும் ஆட்சி பலம் பண பலம் அதிகார பலம் இவையாவும் இருந்தும் ஒரு லட்சம் வாக்குகள் பெற தண்ணி குடித்து விட்டார்கள் தி.மு.க. அவர்களுக்கு பயத்தை காட்டி உள்ளது.

ஐந்து நிமிடம் பிரச்சாரம் செய்தால் ஆகாயத்தை வில்லாய் வலைப்போம் என வும், கொத்து பரோட்டா போடுவோம் என்றனர். ஆனால் மூன்று நாள் தொகுதியில் முட்டையிட்டு சென்று உள்ளார் முதல்வர்.

மக்கள் சக்திக்கு முன்னால் யாரும் பெரிய ஆளே இல்லை. மக்கள் தான் எஜமானர்கள் பிரச்சாரத்தின் போது முதலமைச்சர் டீ குடித்தார் விவசாய டிராக்டர் ஓட்டினார். ஆனால் முதல்வருக்கு டி என்ன விலை என்று தெரியாது. விவசாயக் கடன் தள்ளுபடி செய்தோமா என்கின்ற எல்லாம் அவருக்கு தெரியாது.

ஆகவே என்றும் தி.மு.க. மக்கள் பணியிலும் மக்களுடனும் இருக்கின்ற 75 ஆண்டுகள் கடந்த கட்சி ஆகும் என கூறினார்.

# புதிய மெட்ரோ ரயில் திட்டம்: மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளதா?

## சட்டம் வகுத்துள்ள தரநிலைகள் பின்பற்றப்பட்டனவா? – பேராசிரியர் தீபக் நாதன் கேள்வி!

சென்னை, அக். 12- கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



புதிய மெட்ரோ ரயில் திட்டத்தைத் திறந்து வைப்பதும், நவீன போக்குவரத்துக் கட்டமைப்பை மக்களுக்கு அர்ப்பணிப்பதும் வரவேற்கத்தக்கது. ஆனால், அந்தக் கட்டமைப்பு மாற்றுத்திறனாளிகளும் தடையின்றிப் பயன்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யாமல் திறப்பு விழாவுக்கு முன்னுரிமை அளிப்பது ஏன்? மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளையும் அணுகல் தன்மையையும் உறுதி செய்வதில் அரசு தனது சட்டப்பூர்வக் கடமையை நிறைவேற்றியுள்ளதா? என்ற கேள்விகளைப் பேராசிரியர் தீபக் நாதன் எழுப்பியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016ன் பிரிவு 44 என்ன கூறுகிறது?

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016ன் பிரிவு 44, கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளுக்கான அணுகல்தன்மை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறது. அணுகல்தன்மை விதிகளைப் பின்பற்றாத கட்டடங்களுக்கு கட்டுமான அனுமதி வழங்குவதிலும், நிறைவுச் சான்றிதழ் அளிப்பதிலும், பயன்பாட்டுக்கு அனுமதிப்பதிலும் சட்டம் கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

இந்நிலையில், புதிய மெட்ரோ ரயில் திட்டத்தில் பார்வைத்திறன் குறைபாடு உடையவர்கள், செவித்திறன் குறைபாடு உடையவர்கள், சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவோர் மற்றும் பிற மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் பயணிப்பதற்கான வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளனவா?

மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல்தன்மை தொடர்பான விதிமுறைகளின்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அதற்கான உரிய இணக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளனவா? பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைப்பதற்கு முன்பாக, மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளக்கூடிய தடைகள் அடையாளம் காணப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளனவா? என்பதற்கு அரசு வெளிப்படையான விளக்கமளிக்க வேண்டும்.

அதிகாரிகளின் பொறுப்பு என்ன?

மாற்றுத்திறனாளிகளுக்கான காரத்தில் தனது கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளதா? என்பதையும் அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் திரு. விஜய் அவர்கள், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அணுகல் தன்மை தொடர்பான இத்தகைய முக்கியமான விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பாரா? அல்லது மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் மீண்டும் புறக்கணிக்கப்பட அனுமதிக்கப்படுமா?

மெட்ரோ ரயில் என்பது ஒரு போக்குவரத்துத் திட்டம் மட்டுமல்ல; அது அனைவருக்குமான பொதுச் சேவையாகும். மாற்றுத்திறனாளிகள் பிறரின் உதவியைச் சார்ந்திருக்காமல், பாதுகாப்பாகவும் சுயமரியாதையுடனும் பயணிக்கக்கூடிய சூழலை உருவாக்குவது அரசின் அடிப்படைக் கடமையாகும்.

திறப்பு விழாவை விட உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்!

எனவே, புதிய மெட்ரோ ரயில் திட்டத்தின் அணுகல்தன்மை தொடர்பான ஆய்வு அறிக்கை, உரிய இணக்கச் சான்றிதழ்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தால் அவற்றைச் சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை அரசு பொதுவெளியில் வெளியிட வேண்டும். மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்ச்சி என்பது கட்டமைப்புகளை உருவாக்குவதில் மட்டும் இல்லை; அந்தக் கட்டமைப்புகள் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் சமமான வாய்ப்பையும் அணுகலையும் வழங்குவதில் தான் அதன் உண்மையான பொருள் அடங்கியுள்ளது.

சட்டம் உறுதி செய்துள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமை; அது யாருடைய விருப்பத்தையும் சார்ந்தது அல்ல!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு தி.மு.க. வேட்பாளர் இ.பரந்தாமன் – மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் தலைமையில் நேற்று நன்றி தெரிவித்தார்.